மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இது குறித்து தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 55—திரு. க. பாலகிருஷ்ணன், திரு. தி. கே. நல்லப்பன் : மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் சென்னிமலைக்கு அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை ஒன்று கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) முகாய்யல் ஆற்றின் குறுக்கே பெரியார் மாவட்டம் சின்னா அத்தூர் கிராமத்தின் அருகே ஒரு (Barrage) கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 713 லட்சம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணை கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளதால் நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நொய்யல் ஆற்றுப் பகுதியில் ஒரு இடத்தில் அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள். அந்தத் திட்டமும் இதுவும் ஒன்றா, அல்லது இது வேறு திட்டமா, இரண்டும் ஒன்றுதான் என்றால் இதனால் மேலும் பாசனம் பெறுகின்ற பகுதிகள் எவை எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே இந்தநொய்யலாற்றுத் திட்டம் என்பது ஒரே திட்டம் தான். கோவை மாவட்டம், திருச்சி மாவட்டம், பெரியார் மாவட்டம் போன்றவைகளை இணைக்கக்கூடிய ஒரு திட்டம் இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு தடுப்பு சுவர் கட்டுவதற்குத்தான் இந்த 713 இலட்சம் ரூபாய்ஒது க்கப் பட்டிருக்கின்றது. திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் ஆற்றுப் பாளையம் அருகே ஒரு ரிசர்வாயர் கட்டுவதற்காக 235 இலட்சம்

1982 பிப்ரவரி 5]

ரூபாய் தனியாக ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்திற்குத்தான் தற்போது அடிக்கல் நாட்டினோம். இந்தத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் டெண்டர் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு அந்தத் திட்டத்தின் துவக்க விழா நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை பக்கத்தில் உள்ள நிலங்கள் வானம் பார்த்த பூமியாக இருந்துக் கொண்டு இருக்கிறது. அந்தப் பகுதியிலே பெரும்பாலும் வறட்சி நிலைமை நிலவிக் கொண்டிருக்கிற காரணத்தால், இந்த திட்டத்தை பெருந்துறை வட்டம் முழுவதும் பயன்பெறத்தக்க வகையில் நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது நொய்யல் ஆற்றில், தாராபுரம் வட்டம் சென்னிமலைக்கு அருகில் சின்னாமுத்தூர் கிராமத்தின் அருகில் கட்டப்படுவதால், பெரும்பாலும், முழுமையான அளவில் பெருந்துறை மாவட்டத்திற்கு பயன்படும் என்று சொல்ல முடியாது. பெருந்துறைக்கென்று ஏதாவது பாசன வசதி திட்டங்கள் இருக்கிறதா என்று தனிக் கேள்வியாகப் போட்டால், அதன் மூலம் இதற்கான பதிலை விவரமாகக் கூற முடியும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டு சம்பந்தமாக எங்களுடைய கேள்வியே, பெரியார் மாவட்டத்தில் உள்ள பெருந்துறை வட்டம், பெரும்பாலும் வறட்சியாக இருக்கிற காரணத்தாலும், பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி, சென்னிமலை வழியாக இந்த நொய்யலாறு ஓடுகின்ற காரணத்தாலும், அதிலே அணை கட்டினால், குறைந்தபட்சம் அந்தப் பகுதியில் உள்ள குளம் குட்டைகளாவது பாசனத்திற்கு பயன்படும் வகையில் மாற்ற முடியும் என்ற நோக்கத்தோடு தான் கேட்கப்பட்டது. ஆனால் பலன் வேறு எங்கேயோ போய்விடுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தயவு செய்து மழைக் காலங்களிலாவது குறைந்தபட்சம், கட்டவிருக்கிற சென்னிமலை பக்கம் அணைக்கட்டி பெருந்துறை வட்டத்திலுள்ள குளம் குட்டைகள் நிரம்பி பாசன வசதி பெற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய நன்மையைக் கருதித்தான் நானும் சொன்னேன் தனிக் கேள்வியாகப் போடும்படி. காரணம் மூலக் கேள்வி பெரியார் மாவட்டத்தில் சென்னிமலைக்கு அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை

ஒன்று கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என்பது. அரசின் ஆய்விலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு 713 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது என்று விடையளித்தேன். அது தாராபுரம் பகுதிக்கு அதிகமான அளவில் பயன் தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆகவே நீங்கள் குறிப்பிட்டு பெருந்துறை பகுதிக்கு என்னென்ன திட்டங்கள் இருக்கிறது, இந்த நொய்யலாற்றின் அணை மூலம் அதற்கு ஏதாவது பயன் கிடைக்குமா என்று தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் தரப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதியைப் பொறுத்த வரையில் ஏற்கனவே பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டமும் வேறு பல பாசன வசதிகளும் இருக்கின்றன. ஆனால் பெருந்துறையைப் பொறுத்த வரையில் ஆறு பஞ்சாயத்து நீங்கலாக, எந்தவிதமான பாசன வசதியும் இல்லை. ஆகவே, இதை அரசு மீண்டும் பரிசீலிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, ஆற்றின் போக்கை மாற்றுவதற்கு நமக்கு உரிமை கிடையாது. அணை கட்டும் காரணமே நீர் வளத்தை தேக்கிவைத்து நீர் பற்றாக்குறை காலங்களில் பயன்படுத்துவதற்காகத்தான். ஆகவே ஆற்றின் போக்கை வைத்துக் தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும். பெருந்துறை பகுதி வறண்ட பகுதி என்பதற்காகத்தான் அதற்கென்று வேறு பல திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. இந்தக் கேள்விக்கு அது சம்பந்தம் இல்லாதது, இங்கே சொல்லக் கூடாது என்பதற்காக தான், தனிக் கேள்வியாகப் போடும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டேன். தனியாக கேள்விப் போட்டால் என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சர்க்கரை மீது விதிக்கப்படும் வரி.

*வினா எண். 56—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குவிண்டால் சீனிக்கு மத்திய அரசு விதிக்கும் கலால் வரி அல்லது சுங்க வரி எவ்வளவு?

(ஆ) இவ் வரியைக் குறைத்து வசூல் செய்யும்படி மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?